I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.1
M.C.O.P.NO.112/2020

| | | |
|---|---|---|
| Name | : | Neelagandan |
| Father Name | : | Mohanraj |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.07.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 02.00 p.m**

**மனுதாரர் தரப்பில் விசாரணை**

நான் தமிழக அரசு வருவாய் துறையில் வேலை செய்து வருகிறேன். TN 23 CB 1184 என்ற இருச்சக்கர வாகனம் எனக்கு சொந்தமானதுதான். கடந்த 09.11.2019 அன்று இந்த வாகனம் விபத்திற்குள்ளானது என்றால் நடைபெறவில்லை. முதல் தகவல் அறிக்கை காண்பித்து படித்து கோரினார். சாட்சி படித்து பார்த்துவிட்டு முதல் தகவல் அறிக்கை படி யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் என் வண்டி மீது தாக்கல் செய்துள்ளார். அந்த வண்டியை நான் தான் ஓட்டுனேன். எனக்கு ஓட்டுனர் உரிமம் இருக்கிறது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. TN 23 CB 1184 என்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இருந்ததா என்றால் அந்த நேரத்தில் இல்லை.

இந்த விபத்து சம்மந்தமாக சூரியபிரகாஷ் என்பவர் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வண்டி விபத்தான பிறகு வண்டியை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள

மோட்டார் வாகன ஆய்வறிக்கை படி இருச்சக்கர ஓட்டுனர் நீலகண்டன் த/பெ. மோகன்ராஜ் என்றும் அதன்ஓட்டுனர் பெயர் சூரியபிரகாஷ் த/பெ. சின்னராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சூரிய பிரகாஷ் இந்த வண்டிஓட்டும்போது 18 வயது முடியவில்லை என்றாலும் அவர் இளவர் என்றாலும் சரிதான். சூரியபிரகாஷ் இளவர் என்பதால் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற பத்திரிக்கையை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் சங்கதிகள் எனக்கு தெரியும். அதை யார் தயார் செய்தது என்றால் என் வழக்கறிஞர் தயார் செய்தார், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண். 10 ல் மனுதாரர் குடித்துவிட்டு தனக்குத்தானே விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அது சம்மந்தமாக ஆவணங்கள், மருத்துவ அறிக்கை எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மோட்டார் வாகன ஆய்விற்கு என் வண்டியை ஒப்படைக்கவில்லை என்றால் இல்லை. நான் தாக் வண்டியை காண்பித்து அதன் அடிப்படையில் தான் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தயார் செய்தார்கள் என்றால் போலீசார் வண்டியை எடுத்து சென்றார்கள். அவர்கள் எடுத்து சென்று RTO விடம் காண்பித்தார்கள். அதிலுள்ள என் விலாசம் மற்றும் என் மகன் விலாசத்தை அவர்களே RTO அலுவலகத்தில் எடுத்து கொண்டார்கள். சூரியபிரகாஷ் மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கைக்கு எதிராக நான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு எதுவும் பெறவில்லை என்றால் சரிதான்.

என் மகன் பெயரில் தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் விபத்து சமயத்தில் TN 23 CB 1184 என்ற வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இல்லாததாலும் வண்டியை ஓட்டி சென்று சூரியபிரகாஷ் இளவர் என்பதாலும் அவருக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லாததாலும் மனுதாரருக்கு நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் இது சம்மந்தமாக வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை.

நான் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கே 2 நாட்கள் கழித்து தான் தெரியும். என் மீது தவறு இல்லை என்றால் நான் தான் முதலில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் புகார் கொடுக்காததால் இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்பதாலும் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 02.20 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.